1971 டிசம்பர் 9]

திரு. நா. வீராசாமி : வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கக் கூடிய பீடித் தொழில் முதலாளிகள் ஆங்காங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு பெய்டு ஹாலிடேஸ் கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டும் கூட இப்போது அதைக் கொடுக்கத் தகராறு செய்து கொண்டு பக்கத்திலுள்ள சித்தூர் தாலுகாவில் இருக்கக்கூடியவர்களுக்கு வேலை கொடுக்கிறார்கள். இதனால் அந்தத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை அரசாங்கம் கருத்தில் கொண்டு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதுபோன்று செய்யும் முதலாளிகளை அரசு அழைத்து தக்க அறிவுரை கூறியிருக்கிறது. மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி அரசு பரிசிலித்து வருகிறது.

வட ஆர்க்காடு மாவட்ட பீடித் தொழிலாளர்கள்

*197 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் அண்மையில் பீடித் தொழிலாளர்களுக்கும், பீடி முதலாளிகளுக்கும் இடையே தொழில் உறவு பற்றிய ஒப்பந்தம் ஏதேனும் ஏற்பட்டதா ?

(இ) ஆம் எனில், அது அமல் நடத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ், வட ஆர்க்காடு மாட்டத்தில் பீடி வணிகக்குறி உரிமையாளர்களுக்கும் பீடி சுற்றுபவர்களுக்கும் இடையே, சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் **7—7—1970** அன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்படிக்கையைத் தவிர வேறு எந்த உடன்படிக்கையும் அண்மையில் ஏற்படவில்லை.

(இ) ஆம்.

திரு. கே. ஏ. வகாப் : அந்த உடன்படிக்கையின் ஷரத்துக்கள் என்ன ? இன்று நாட்டில் உள்ள பல லட்சக் கணக்கான பீடித் தொழிலாளர்கள் மற்றத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க கூடிய எந்த விதமான வசதிகளையும் பெறாமல் அல்லலுற்றுக் கொண்டிருப்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். மற்றத் தொழிலாளர்கள் பெறுகிற சுகாதார வசதி, மற்றும் எல்லா வசதிகளும் இந்தப் பீடித் தொழிலாளர்களுக்கும் கிடைக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏற்கனவே அந்த உடன்பாட்டில் சில உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதைச் சில முதலாளிகள் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சிலர் அதை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பதால் அந்த இடங்களில் நடை முறைக்குக் கொண்டு வரத் தடையாக இருக்கிறது. விரைவில் அரசு தக்க ஏற்பாடுகளைச் செய்யும்.

திரு. கே. என். குமாரசாமி: நாடு பூராவும் இருக்கும் பீடித் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் சில உரிமைகளை வழங்க வேண்டுமென்பதில் இ.எஸ்.ஐ. திட்டம், பிராவிடன்ட் ஃபண்ட் போன்ற திட்டங்களும் அந்தத் தொழிலாளர்களுக்காக நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: நாடு முழுவதும் இருக்கக்கூடிய பீடித் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் அளிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்படும். அந்தக் கமிட்டியிடம் இந்த விவரங்களைக் கூறினால் பரிசீலனை செய்யப்படும்.

DR. H. V. HANDE: Sir, are the Government aware of the fact that many of these workers actually do not work in the factory. Their wives and children also work in their houses. The wages that they get are not commensurate with their work-load. Also in view of the unhygienic conditions in which thousands of workers live, will the Government appoint a small committee to go into the health aspect of the workers so that at least medical benefits could be given to them even if the Government cannot do something about their wages.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.

சொக்கம்பட்டி அரிசனக் குடியிருப்பு

*198 வினா—திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

முகவை மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சொக்கம்பட்டியில் அரிசனக் காலனி கட்டி முடிக்கச் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ரூ. 9,400.

திரு. கா. காளிமுத்து: அரிசன நல நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட தொகை முழுவதையும் கொண்டு வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட பின்னும் தளம் அமைக்கப்படாமலே இருக்கிறது. தளத்தை உடனடியாக அமைத்து அந்த அரிசனப் பெருமக்கள் குடியேற ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஒரு வீட்டுக்கு 940 ரூபாய் என்ற விகிதத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தளம் அமைக்கிற பிரச்சினை இதிலே எழவில்லை. சிறிய வீடுகள்தான், அவை கட்டி முடிக்கப்பட்டு விடும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.